# 12 th கணக்குப்பதிவியல்

## ( 12 மதிப்பெண் வினாவிடை)

## 1. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

**தேய்மானம் ஏற்பட காரணங்கள்**

| அகக் காரணங்கள் | புறக்காரணங்கள் |
|---|---|
| 1) தேய்வு | 1) வழக்கொழிவு |
| 2) உபயோகிக்கப்படாமை | 2) காலப்போக்கு |
| 3) பராமரிப்பு இன்மை | 3) கால நிர்ணயம் |
| 4) வெறுமையாதல் | |

**அகக்காரணங்கள்**

1. **தேய்வு புலனாகும்:** சொத்துக்களை தொடர்ந்து பயன்படுத்துவதால் உராய்வு காரணமாக தேய்வடைந்து தேய்மானம் ஏற்படுகிறது.
2. **உபயோகிக்கப்படாமை:** தொடர்ந்து ஒரு இயந்திரத்தை பயன்படுத்தாமல் இருந்தால் அது தன் உபயோகத் தன்மையை இழந்து விடுகிறது.
3. **பராமரிப்பு இன்மை:** ஒரு இயந்திரம் சரிவர பராமரிக்கப்படவில்லை எனில் அதுதன் உபயோகத் தன்மையை விரைவாக இழந்து விடுகிறது.
4. **வெறுமையாதல்:** சுரங்கள், எண்ணெய் கிணறுகள் போன்றவற்றலிருந்து கனிம வளங்களைத் தொடர்ந்து வெளியே எடுப்பதால் அவை மதிப்பினை இழக்கின்றன.

**புறக்காரணங்கள்**

1. **வழக்கொழிவு:** புதிய கண்டுபிடிப்புகள், தொழில் நுட்ப வளர்ச்சியினால் பழைய சொத்துகள் பயனற்றவையாகின்றன.
2. **காலப்போக்கு:** பருவமாற்றம், காற்று, மழை போன்ற இயற்கை காரணங்களால் மதிப்பு குறைகிறது.
3. **கால நிர்ணயம்:** குத்தகை, பதிப்புரிமை போன்றவை குறிப்பிட்ட காலம் கடந்த பிறகு மதிப்பிழந்து விடுகின்றன.

## 2. தேய்மானம் நீக்கவேண்டியதன் தேவைகள் யாவை?

**1. சரியான இலாபம் (எ) நட்டம் கண்டறிய**

ஒவ்வொரு கணக்காண்டிலும் சரியான நிகர இலாபம் (எ) நிகர நட்டம் கண்டறிய தேய்மானம் ஒரு செலவாக கருதப்பட்டு வருவாயில் சரி செய்ய வேண்டும்.

**2. உண்மையான நிதி நிலையை உணர்த்த**

இருப்பு நிலை குறிப்பில் உண்மையான நிதி நிலையை உணர்த்த வேண்டுமெனில், அதில் இடம் பெற்றுள்ள சொத்துக்களின் உண்மையான மதிப்பிலிருந்து தேய்மானம் கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருக்க வேண்டும்.

**3. உண்மை உற்பத்தி செலவை கண்டறிய**

பொருட்களின் உண்மையான உற்பத்தி செலவை கண்டறிய நிலை சொத்தின் மீதான தேய்மானம் விலக்கப்பட்டிருக்க வேண்டும்.

**4. சட்டத் தேவையை பின்பற்ற**

நிறுமசட்டம் 1956, பிரிவு 2005 (1) ன் படி பங்காதாயம் அறிவிப்புக்கு முன்பாக நிறுமங்கள் கட்டாயமாக நிலை சொத்துகளின் மீதான தேய்மானம் விலக்குதல் வேண்டும்.

5. **பழைய நிலை சொத்திற்கு பதிலாக புதிய நிலை சொத்து இடம் பெறச் செய்ய**

பழைய நிலை சொத்திற்கு பதிலாக புதிய நிலை சொத்து இடம் பெறச் செய்ய தேய்மானம் நீக்குதல் அவசியமாகிறது.

*****************

## 3. ஏதேனும் நான்கு தேய்மான முறைகளை விவரி.

### அ) ஆண்டுத் தொகை முறை

- ❖ சொத்து வாங்குவதற்கான பணத்தினை வேறுவகையில் முதலீடு செய்திருந்தால் வட்டி பெறப்பட்டிருக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இக்கருத்து அமைகிறது.
- ❖ இம்முறையில் ஆண்டுத்தொகை அட்டவணையைக் கொண்டு தேய்மானத்தொகை நிர்ணயிக்கப்படுகிறது.
- ❖ இம்முறை குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட பயன்படுத்தப்படுகிறது.

### ஆ) தேய்மான நிதிமுறை

- ❖ தேய்மானத் தொகை குறிப்பிட்ட வட்டி வீதம் தரக்கூடிய பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பெறப்படும் வட்டியும் தேய்மானத்தொகையும் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகின்றன.
- ❖ சொத்தை மாற்ற வேண்டிய நிலை வரும் பொழுது, முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரங்கள் விற்கப்பட்டு, அத்தொகை மூலம் புதிய சொத்து வாங்கப்படும்.
- ❖ இம்முறையில் தேய்மானம் தேய்மானநிதி அட்டவணை மூலம் கணடக்கிடப்படுகிறது.

**இ) காப்புறுதி பத்திரமுறை**

- ❖ ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத் தொகை முனைமமாகச் செலுத்தப்படுகிறது.
- ❖ காப்பீட்டுக் காலம் முடிவடையும் பொழுது தொகை பெறப்படுகிறது.
- ❖ இந்தத் தொகை பழைய சொத்திற்கு பதிலாக புதிய சொத்துப் பெறுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

**ஈ) நேர்க்கோட்டு முறை**

- ✓ இம்முறையில், அடக்க சொத்தின் மீது தேய்மானம் கணக்கிடப்படுகிறது.
- ✓ இதனால் ஒவ்வொரு ஆண்டும் சீராக சொத்தின் வாழ்வு முழுவதும் தேய்மானம் நீக்கப்படுகிறது.
- ✓ இது மூல அடக்கவிலை முறை என்றும் அழைக்கப்படும்.

*****************

## 4. தேய்மானத் தொகையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

தேய்மானத் தொகையை நிர்ணயிக்கும் காரணிகள்

1. **சொத்தின் அடக்கவிலை** சொத்தின் அடக்கவிலை, நிறுவுகைச் செலவு, முதலினத் தன்மை கொண்ட மேம்படுத்தும் செலவுகள் போன்றவற்றை இது உள்ளடக்கியது.
2. **எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்:** ஒரு சொத்தை எவ்வளவு காலம் பயன்படுத்தலாம் என்பதை இது உணர்த்துகிறது.
3. **இறுதி மதிப்பு:** ஒரு சொத்தின் பயனளிப்பு காலம் முடிவடைந்த பிறகு அதை விற்கும் பொழுது கிடைக்கக் கூடிய மதிப்பு இறுதி மதிப்பு எனப்படும். இது எறிமதிப்பு என்றும் அழைக்கப்படும்.

*****************

## 5. ரொக்க திட்ட பட்டியல் என்றால் என்ன அதன் தன்மைகள், நன்மைகள் ஆகியவை பற்றி எழுதுக.

**ரொக்க திட்ட பட்டியல் :**

1) வணிகத்தில் நேரடியாக (எ) மறைமுகமாக ஏற்படக்கூடிய ஒவ்வொரு ரொக்க நடவடிக்கையையும் கருதில் கொண்டு தயாரிக்கப்படும். மிக முக்கிய திட்டப்பட்டியல் ரொக்கத் திட்டப்பட்டியல் ஆகும்.
2) இது எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ரொக்க பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் குறித்த ஒரு அறிக்கை ஆகும்.
3) இதனை நிதி திட்டப்பட்டியல் என்றும் அழைக்கலாம்.

**தன்மைகள்**

1. இது எதிர்காலம் குறித்து முன்னரே தயாரிக்க கூடியாது.
2. இது பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் தெரிவிக்கக் கூடியது.
3. இது திட்ட இலக்கை அடைவதற்கான வழி.

**நன்மைகள்**

1. இது போதுமான ரொக்க இருப்பை பேண உதவுகிறது.
2. மேலாண்மைக்கு பயனளிக்கும் வகையில் பின்வரும் செய்திகளை அளிக்கின்றன.

(அ) வணிகத்தின் ரொக்க தேவையை நிர்ணயிக்க

(ஆ) நிதி தேவையை பூர்த்தி செய்யும் திட்டம் தீட்ட

(இ) வணிக அமைப்பின் ரொக்க இருப்பில் கட்டுபபாட்டினை ஏற்படுத்த.

**6) பெறுதல் மற்றும் செலுத்தல் முறையில் ரொக்கதிட்டப்பட்டியல் தயாரித்தலை விவரி? (அ)**

**ரொக்க திட்ட பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகள் யாவை?**

இம்முறையில் தயாரிக்கப்படும் ரொக்கத் திட்டப்பட்டியலில் நிறுவனத்தின் ரொக்க பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன் கணிக்கப்படுகின்றன. இதில் இரு அடிப்படை கூறுகள் உள்ளன.

1. ரொக்க பெறுதல்கள் முன்கணிப்பு
2. ரொக்க செலுத்தல்கள் முன்கணிப்பு

**ரொக்க திட்ட பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகள்**

நிலை 1 — தொடக்க ரொக்க இருப்பை எடுத்துக் கொள்க

நிலை 2 — அம்மாதத்தில் பெற வேண்டிய மொத்த ரொக்க பெறுதல்களை மதிப்பிட்டு கூட்டுக

நிலை 3 — அம்மாதத்தின் மொத்த ரொக்க இருப்பை கணக்கிடுக

நிலை 4 — அம்மாதத்தின் மொத்த ரொக்க செலுத்தல்களை மதிப்பிட்டு கழிக்க

நிலை 5 — இறுதி ரொக்க இருப்பை கணக்கிடுக

நடப்பு மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு அடுத்த மாதத்தின் தொடக்க ரொக்க இருப்பு ஆகும்.

*****************

**7) தியாக விகிதத்துக்கும் ஆதாய விகிதத்துக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| அடிப்படை | *தியாகவிகிதம்* | *ஆதாயவிகிதம்* |
|---|---|---|
| 1) பொருள் | புதிய கூட்டாளிக்கு தருவதாக பழைய கூட்டாளிகள் ஒப்புக் கொண்ட தியாகப் பங்குகளின் விகிதம் ஆகும் | தொடரும் கூட்டாளிகள் வெளிச் செல்லும் கூட்டாளியிடம் இருந்து பெற்ற பங்குகளின் விகிதம் ஆகும். |
| 2) நோக்கம் | *உள்வரும் கூட்டாளி பழைய கூட்டாளிகளுக்குத் தரும் ஈட்டுத்தொகை நிர்ணயிக்க உதவுகிறது* | *வெளிச் செல்லும் கூட்டாளிக்கு தொடரும் கூட்டாளிகள் தரும் ஈட்டுத் தொகை நிர்ணயிக்க உதவுகிறது.* |
| 3) கணக்கிடுதல் | பழைய விகிதத்திலிருந்து புதிய விகிதத்தை கழித்துக் கணக்கிடப்படுகிறது | புதிய விகிதத்திலிருந்து பழைய விகிதத்தை கழித்து கணக்கிடப்படுகிறது. |
| 4) காலம் | *புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது.* | *கூட்டாளி ஒருவர் விலகும் பொழுது கணக்கிடப்படுகிறது.* |

**8) நற்பெயர் என்றால் என்ன நற்பெயர் மதிப்பை பாதிக்கும் காரணிகள் யாவை?**

- ❖ நற்பெயர் என்பது நிறுவனம் வருங்காலத்தில் எதிர்பாக்கும் கூடுதல் இலாபத்தை கணக்கிட்டு உருவாக்கப்படும் தற்போதைய மதிப்பு ஆகும்.

- ❖ நிறுவனம் சாதாரண இலாபத்தைவிட அதிக இலாபம் ஈட்டும் பொழுதுதான் நற்பெயர் உண்மையாக உருவாகிறது.

- ❖ நற்பெயரை கண்ணாலோ, தொட்டோ பார்க்க இயலாது. அது ஒரு புலனாகாச் சொத்து ஆனால் கற்பனைச் சொத்தல்ல.

**நற்பெயர் மதிப்பை பாதிக்கும் காரணிகள்**

நற்பெயர் நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறனை அடிப்படையாக கொண்டது.

1. **தரம்:** நிறுவனத்தின் பொருள்கள் தரமாக இருப்பதனால் ஏற்பட்டுள்ள நன்மதிப்பு காரணமாக பொருட்கள் உடனடியாக விற்பனை ஆகின்றன.

2. **இடம்:** நிறுவனம் அமைந்துள்ள இடம் முக்கியமான இடமாக இருந்தாலே, மதிப்பு கூடும்.

3. **சிறந்த மேலாண்மை:** நிறுவனம் சிறப்புடன் மேலாண்மை செய்யப்படுவதன் மூலம் அதிக இலாபம் ஈட்டப்படுவதால் நிறுவன மதிப்பு உயர் வடைகிறது.

4. **போட்டி:** போட்டி இல்லாமலோ (எ) போட்டி குறைவாகவோ இருந்தாலே நிறுவனத்தின் மதிப்பு கூடுகிறது.

5. **புனை உரிமையின் நன்மைகள்:** வணிக்குறி, புனை உரிமை மதிப்புரிமை ஆகியவை பெற்றிருந்தால் நிறுவன மதிப்பு உயர்வடைகிறது.

6. **காலம்:** நிறுவனம் தொடர்ந்து பல ஆண்டுகள் இலாபம் ஈட்டுவதால் நன்மதிப்பு வளர்ந்து கொண்டே இருக்கிறது.

7. **வாடிக்கையாளர் மனப்பாங்கு:** ஒரு நிறுவனம் பெற்றுள்ள வாடிக்கையாளர் மனப்பாங்கு முக்கியவாகும்.

8. **தொழிலின் தன்மை:** நிறுவனத்தின் நிலைத்த தேவையினால் அதிக இலாபம் ஈட்டுகிறது அதனால் நற்பெயர் அதிகரிக்கிறது.

## 9. நிலை முதல் முறைக்கும் மற்றும் மாறுபடும் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| அடிப்படை | நிலைமுதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| 1. முதல் தொகையில் மாற்றம் | முதல் தொகை சில சூழ்நிலை தவிர பொதுவாக மாறாமல் அதே தொகையாக இருக்கும். | முதல் தொகை ஆண்டுக்காண்டு மாறுபடுகிறது. |
| 2. கணக்குகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கூட்டாளி பெயரிலும் இரண்டு கணக்குகள் அதாவது முதல் கணக்கு மற்றும் நடப்பு கணக்கு தொடங்கப்படும். | ஒவ்வொரு கூட்டாளி பெயரிலும் ஒரே ஒரு கணக்கு அதாவது முதல் கணக்கு மட்டும் தொடங்கப்படும். |
| 3. இருப்பு | முதல் கணக்கு எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும், நடப்பு கணக்கு வரவோ, பற்றோ இருப்பாக காட்டும் | முதல் கணக்குகள் எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும் |
| 4. சரிகட்டுதல் | கூட்டாளி சம்பந்தப்பட்ட அனைத்து சரிகட்டுதல்களும் நடப்பு கணக்கில் பதியப்படும். | அனைத்து சரிகட்டுதல்களும் முதல் கணக்கில் செய்யப்படும். |

*****************

## 10. கூட்டாண்மையின் வரைவிலக்கணம் தந்து, சிறப்பியல்புகளை கூறுக.

கூட்டாண்மை இந்திய கூட்டாண்மை சட்டம் 1932 பிரிவு 4ன் படி "அனைவருமோ, அனைவரின் சார்பில் அவர்களில் எவரோ, ஒரு தொழிலை நடத்தவும், அதில் ஏற்படும் இலாபத்தை பகிர்ந்து கொள்ளவும் உடன்பட்டு அந்த நபர்களிடையே ஏற்படும் உறவு ஆகும்.

**கூட்டாண்மை சிறப்பியல்புகள்:**

1) இரண்டும் அதற்கு மேற்பட்ட நபர்கள் கொண்ட குழுமம். கூட்டாண்மை உருவாக்க குறைந்த பட்சம் இரண்டு நபர்கள் இருக்க வேண்டும். அதிக பட்சமாக வாங்கித் தொழிலாக இருந்தால் 10 நபர்களும், மற்ற தொழிலாக இருந்தால் 20 நபர்களும் இருத்தல் வேண்டும்.
2) கூட்டாளிகளிடைய உடன்பாடு கூட்டாளிகளிடையே ஏற்பாடு உடன்பாட்டின் காரணமாகவே அவர்களிடையே உறவு ஏற்படுத்தப்படுகிறது.
3) இலாபப் பங்கேற்பு கூட்டாண்மை உடன்பாடு கூட்டாளிகளின் தொழிலின் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொள்வதை உறுதி செய்கிறது.
4) சட்டப்படியான தொழில் கூட்டாண்மை உடன்பாடு சட்டப்படியான தொழில் புரிந்து இலாப ஈட்டுவதாக இருத்தல் வேண்டும்.
5) அனைவருமோ (எ) அவர்களில் எவருமோ தொழில் செய்தல் கூட்டாண்மையின் மிக முக்கியமான சிறப்பியல்பு பரஸ்பர மற்றும் உட்கிடை முகமை ஆகும்.

**Prepared by G.BASKER ,** PG Asst, **Hindu Hr.Sec.School**,Madurantakam Kanchipuram Dt 603306

Suggestions (to improve this material) are always welcome to
baskergb@gmail.com cell: 9994714806

**தேர்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்**